டிசம்பர் 30–ஜனவரி 5

பாடம் 1

# லௌகீகத்தின் தாக்கம்

**மனன வசனம்**

**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறித்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். ரோமர் 12:2.**

**ஆராய்ச்சிக்கு**

**1யோவான் 2:16,17;**

**லூக்கா 14:26-33;**

**லூக்கா 12:15-21;**

**உபாகமம் 8:10-14;**

**1தீமோத்தேயு 6:10;**

**யோவான் 15:5;**

**கலாத்தியர் 2:20.**

டிசம்ப 30 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.



இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரிக்க வேண்டாமென தேவ பிள்ளைகளை தேவ வார்த்தை எச்சரிக்கிறது. ஆனால் லௌகீகக் கவர்ச்சியும், உலகப் பொருள் சேர்ப்பதில் கட்டுக்கடங்கா ஆசையும், பணத்தால் இதுவெல்லாம் கிடைக்குமே எனும் ஏக்கமும் வலிமையாக உள்ளது! ஏழைகளிலும் பணக்காரரிலும், ஏன் கிறிஸ்தவர்களிலும்கூட பண ஆசைக்கு ஆளாகாதவர்கள் வெகுசிலர்தாம்.

பணக்காரர்களாக இருப்பதிலும், நாமும் நமக்குப் பிரியமானவர்களும் வசதியாக வாழ்வதற்காகக் கடினமாக உழைத்து, முன்னேற நினைப்பதிலும் தவறு இல்லை. ஆனால், பணம் அல்லது பணம் சம்பாதிப்பது தான் எல்லாம் என்றாகிவிட்டால், நாம் சாத்தானின் கண்ணியில் சிக்கிவிட்டோம்; 'இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம்' தரித்துவிட்டோம். ரோமர் 12:2.

பணம் இருந்தால்மட்டுமே நல்லவர்களாக, பரிபூரண வாழ்க்கை வாழமுடியுமென்கிற எண்ணத்தை உலகம்உண்டாக்குகிறது. நாம் அவனை ஆராதிக்கும்படி லௌகீகம் என்கிற முகமூடி அணிந்தே சாத்தான்வலம் வருகிறான். கிறிஸ்தவர்களுக்கு எதிராக சாத்தான் பயன்படுத்தும் பிரத்தியேக ஆயுதமாக பணம் இருக்கிறது. பணத்தால் சாதிக்கக்கூடிய விஷயங்கள் பல இருப்பதால், பணம் யாருக்குத்தான் பிடிப்பதில்லை? ஆனால், பணத்தால் சாதிக்கமுடிந்தது எவ்வளவுதான் பெரிதாக இருந்தாலும், அது தற்காலிகமானதே! நம் ஆழமான தேவைகளை பணத்தால் ஒருபோதும் சந்திக்கமுடியாது.

2017, ஜனவரி 6 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## இப்பிரபஞ்சத்தின் தேவன்

பணமே இன்றைய உலகின் கடவுள்; லௌகீகமே அதன் மதம். லௌகீகத்தில் சூது உண்டு; நயவஞ்சகம் உண்டு. லௌகீகத்தால் தற்காலிகப் பாதுகாப்பு தரமுடியும்; முழுப்பாதுகாப்பு தரமுடியாது.

ஆவிக்குரிய நலன்களைவிட சொத்துகளுக்கும் சுகங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, அவற்றை அதிகம் விரும்புவதுதான் லௌகீகம். பொருட்களால் பயன் உண்டுதான்; ஆனால் அவற்றின் மதிப்பு நம்மை மதிப்பற்றவர்களாக ஆக்கி விடக்கூடாது. 'பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப் பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை.' பிரசங்கி 5:10. இவ்வுலகப் பொருட்களை இச்சிப்பதால் உண்டாகும் பிரச்சனையே இதுதான்; எவ்வளவுதான் சம்பாதித்தாலும் போதாது; ஒருபோதும் திருப்தியடையாமல் இருப்போம். மேலும் மேலும் அவற்றைப் பெற, பிரயாசப்பட்டுக்கொண்டே இருப்போம். அது ஒரு கண்ணியாகிவிடும்!

***உண்மையிலேயே எதில் நம்முடைய நாட்டம் இருக்கவேண்டும்? 1யோவான் 2:16,17.***

***கிறிஸ்தவர்கள் எதற்கு முதலிடம் கொடுக்கவேண்டும்? லூக்கா 14:26-33.***

இதை இப்படியும் சொல்லலாம்; யாருக்கெல்லாம் பணமும் பொருளாசையும் எல்லாமாக இருக்கிறதோ, அவர்கள் அதற்கான விலையைக் கொடுத்தே ஆக வேண்டும். 'மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால், அவனுக்கு லாபம் என்ன?' மாற்கு 8:36.

'கிறிஸ்து இப்பூமிக்கு வந்திருந்த சமயத்தில், மனித இனம் சீர்கெட்டு, வீழ்ந்துவிடும்போல இருந்தது. சமுதாயத்தின் அடிப்படை நியதிகள் தரங்கெட்டிருந்தன. வாழ்க்கை தன் இயல்நிலையிலிருந்து புரண்டு, பொய்யாகிப்போயிருந்தது. உலகம் முழுவதிலும் மக்கள் மனதிலும் ஆத்துமாவிலும் பக்திக்கேதுவானவற்றின் பிடி தளர்ந்திருந்தது. தங்கள் சிந்தை மழுங்கத்தக்கதாக, பொய்புரளிகளால் தங்களைக் கெடுத்திருந்தவர்கள் அவபக்தியும் லௌகீகமும் நிறைந்தவர்களாக மாறியிருந்தார்கள். நித்தியவாழ்வு குறித்து கொஞ்சமும் சிந்தை இல்லாதவர்களாக, அப்போதைக்காகமட்டுமே வாழ்ந்தார்கள்.' - *EGW, Education, p 74,75.*

***அவபக்தியாலும் லௌகீகத்தாலும் இழுக்கப்பட்டு, அப்போதைக்காகமட்டுமே வாழுதல் என்பது நம்மிலும் இருக்கிறது அல்லவா?***

பொருள்சேர்க்கும் ஆசை யாருக்குத்தான் இல்லை? நம்மிடம் இருப்பது கொஞ்சப் பொருளாகக்கூட இருக்கலாம்; ஆனால், அவை நம்மை ஆளுகின்றனவா என்பதே கேள்வி. யார்மட்டும் நம்மை ஆளவேண்டும்? அந்த நிச்சயத்தை நாம் எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம்?

***லூக்கா 12:15-21 சொல்லும் செய்தி என்ன? பணம் இல்லாதவர்கூட இப்படிப்பட்ட தவற்றைச் செய்யக்கூடும். எவ்வாறு?***

ஏழையோ பணக்காரரோ, பொருளாசை அவர் சிந்தையை மெய்யான விஷயங்களிலிருந்து விலக்கிவிடும்; மாறாக தற்காலிகமான, கடந்துபோகிற விஷயங்களில் நிலைக்கச்செய்யும்; நித்திய ஜீவனை இழந்துபோகுமளவுக்கு இவை முக்கியமானவை அல்ல.

பொன் அல்லது வெள்ளியினால் செய்யப்பட்ட ஒரு சிலைக்குமுன்பாக இன்று நாம் பணிந்து வணங்காமல் இருக்கலாம். ஆனால், வேறே உருவில் பொன்னையும் வெள்ளியையும் வணங்குகிற ஆபத்தில் நாம் இருக்க வாய்ப்புள்ளது.

இந்த உவமை எவ்வளவு உண்மை என்பதை இன்று உலகின் பல பகுதிகளில் காணலாம்; பொருள்சேர்ப்பதற்காகமட்டுமே வாழ்கிறார்கள். உலகம் முழுவதும் விற்பனையாளர்கள் தங்கள் பொருட்களை விற்பதற்கென்று ஒரு பொய்யைப் பரப்புகிறார்கள். அவர்கள் விற்பதை வாங்காவிட்டால், நமக்கு சந்தோஷமோ திருப்தியோ கிடைக்காது என்று நம்மை நம்பவைப்பதே அவர்களின் விற்பனை வியூகம். ஒரு பொருளைத் தயாரித்தபின், அது நமக்கு அவசியம் தேவை என்று நம்மை நம்பச்செய்து, விற்றுவிடும் நிறுவனங்கள் இன்று வெற்றிநடை போடுகின்றன. அவர்கள் வியூகம் வெற்றியாக அமைந்துவிடுகிறது! இந்த உலகத்தின் மேல் நம்பிக்கைவைக்காத கிறிஸ்தவர்கள்கூட, இந்த வஞ்சகத்திலிருந்து தப்ப முடிவதில்லை.

***உபா 8:10-18இல் சொல்லப்பட்டுள்ள எச்சரிப்பின்படி நிகழும் அபாயம் ஏன் ஒவ்வொரு சபை அங்கத்தினர்களுக்கும் உள்ளது?***

சொத்துக்களும் உலகப்பொருட்களும் சேர்ப்பதால் ஒருவருடைய ஆவிக்குரிய வாழ்விலும், தேவன்மேலுள்ள அன்பிலும், பரலோக-ஆவிக்குரிய விஷயங்களின் மேலுள்ள நாட்டத்திலும் வளர்ச்சி ஏற்படுகிறதென்று வேதாகமம் அல்லது இன்றைய உலகத்திலிருந்து ஏதாவது உதாரணம் காட்டமுடியுமா? உங்கள் பதிலை வகுப்பில் பகிர்ந்துகொள்ளுங்கள்.

**செவ்வாய்**
**ஜனவரி 2**

# லௌகீகத்தின் கவர்ச்சி

விளம்பர உலகம் வலிமையானது. தங்கள் பொருட்களை விளம்பரப்படுத்த நிறுவனங்கள் கோடிக்கணக்கில் செலவிடுகின்றன. அழகான, கவர்ச்சியான நபர்களை வைத்து விளம்பரம்பண்ணுகிறார்கள். நாம் அந்தப் பொருளின் உண்மையான பயனைப் பார்க்காமல், விளம்பரத்தில் வரும் நபர்களைபோல மாற ஆசைப்படுகிறோம்.

நயவஞ்சகமாகவும், சிலசமயங்களில் வெளிப்படையாகவும் சிற்றின்ப உணர்வுகளைத் தூண்டுகிற விதத்தில் விளம்பரம்செய்கிறார்கள்; லௌகீகம் இன்று வலிமையாவதற்கு இதுதான் முக்கியக் காரணமாக இருக்கிறது. லௌகீகம் எனும் கண்ணிக்கு எதிர்த்துப் போரடுகிற கிறிஸ்தவர்களுக்கு இந்த விளம்பரங்கள் விஷங் களாக உள்ளன.

***மத் 6:22-24 வசனங்களை வாசியுங்கள். கண்ணானது எவ்வாறு கிறிஸ்த சிந்தையையும் செயலை யம் சுட்டிக்காட்டுகிறது? நமக்குத் தேவையில்லாத ஒன்றை நாம் வாங்கும்படி நம்மைத் தூண்டுகிற வஞ்சகக் காட்சிகளைப் பார்க்கும்போது, கிறிஸ்தவர்களாகிய நம் எதிர்வினை எப்படி இருக்கவேண்டும்?***

நம் சிற்றின்ப உணர்வுகளைத் தூண்டும்விதத்தில் விற்பனையாளர்கள் தங்கள் பொருட்களை விளம்பரப்படுத்துவது சக்திவாய்ந்த யுத்தியாகும். நுகர்வோரின் உணர்வுகளைத் தூண்டிவிட்டு, விற்பனைசெய்கிறார்கள். நுகர்வோர் பெறுவது கற்பனா இன்பம்தான்; ஆனால், வியாபாரிகளுக்குப் பணம் கிடைக்கிறது. ஏதோ மாயாஜாலத்தால் வேறோர் உலகிற்குப் போகும் அனுபவம் மக்களுக்கு உண்டா கிறது. எந்த அறிவும் ஆவிக்குரிய உண்மையும் இல்லாத பொய்மதமாக அது இருக் கிறது. ஆனாலும், அதீதக் கவர்ச்சியாக அது இருப்பதால், அநேகர் எதிர்ப்பது இல்லை. "எனக்கு இது வேண்டும்; இதை நான் பெறக் கூடாதா? எனக்குத் தகுதி இல்லையா?" என்று கேட்கிறோம். நமக்கு ஒன்று தேவைப்படுவதாகவும், அதை நமக்குத் தருவதாகவும் நம்மை நம்பச்செய்ய விளம்பரதாரர்கள் எத்தனை கோடி செலவிடுகிறார்கள் என்பதும், இன்னும் எவ்வளவு செலவிடுவார்கள் என்பதும் தேவனுக்குமட்டுமே தெரியும்.

ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப் பீர்கள். கலா 5:16. மாம்ச இச்சை என்றதும், பாலியல் சம்பந்தப்பட்ட விஷயமென நினைக் கிறோம். அதுமட்டுமல்ல, வேறு என்ன விதங்களில் மாம்ச இச்சையில் வீழ்கிறோம்?

*எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது; உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ண முள்ளவனாய் எண்ணவேண்டும். ரோமர் **12:3.**,*

'உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று; உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய்' என்று தேவன் சொன்னார். எசே 28:17. உண்மை யிலேயே தன்னுடைய நிலை என்னவென்பதை எண்ணாமல், லூசிபர் தன்னை வஞ்சித்தான். 'உன்னதமானவருக்கு ஒப்பாவேன்' என்று அவன் இருதயம் பேசி யது. ஏசா 14:14. தனக்கில்லாத உரிமைகளைக் கோரிய அவன் இருதயத்தில் சுய நல நோக்கு எட்டிப்பார்த்தது. லூசிபரின் விழுந்துபோன இருதயத்தில், சுயவஞ்சக மும் சுயநல நோக்கும் காணப்பட்டன.

சுயமுக்கியத்துவத்தைத் தேடினதுதான் முதல் பாவத்திற்கு காரணம்; லூசிபர் விழுந்த விதம்பற்றி வேதாகமம் சொல்வதிலிருந்து இது புரிகிறது. சுயமுக்கியத் துவத்தைத் தேடுகிறவர், தன்னையே அளவுக்கதிகமாக மெச்சிக்கொள்வார். சுயவஞ்சகத்தை அதிகமாக வெளிப்படுத்துகிற குணங்கள் வேறு எவையாவது இருக்கின்றனவா?

மேலும், நாம் நினைப்பதைவிடப் பெருமளவில் இந்தக் குணங்கள் காணப் படுகின்றன. தன் உண்மைநிலைக்கு அதிகமாக, தான பெரியவனென்று நேபு காத்நேச்சார் எண்ணினார். தானி 4:30. இதே மருட்சி மாயையில்தான் பரிசேயரும் சிக்கியிருந்தார்கள். லூக் 18:11,12. நாம் கவனமாக இல்லாவிட்டால், இதே வஞ்ச கத்திற்குள் செல்வம் நம்மை இழுத்துவிடும்.

**எந்த ஆபத்தைக் குறித்து 1தீமோ 6:10இல் பவுல் எச்சரிக்கிறார்?**

---

---

பலவித மோசமான மனிதர்கள் குறித்து தீமோத்தேயுவை பவுல் எச்சரிக்கிறார் 2தீமோ 3:1-5. அதில் 'பண ஆசை' உள்ளவர்களும் அடங்குவார்கள். பண ஆசை யால் சுயநல நாட்டம், அகந்தையும் வீம்பும் மிக்க மனநிலை, அளவுக்கதிகமான அளவில் தன்னை நம்புதல் போன்றவை பெருகுகின்றன. பெரும்செல்வந்தர்கள் தங்களை மேன்மேலும் உயர்த்தும்படிக்கு பொருளாசை அவர்களைக் குடைகிறது. அதிக பணம் இருப்பவர் தன்னைப் பற்றி எண்ணுவதற்கும் அதிகமாக எண்ணும்படி லௌகீகம் தூண்டுகிறது. பணக்காரராகவேண்டும் என்கிற ஆசை எல்லாருக்கும் இருக்கிறது; ஆனால், ஒரு சிலரால்தானே பெரும் செல்வம் ஈட்டமுடிகிறது. எனவேதான், பணக்காரர்கள் சுயநலநாட்டமும் பெருமையும் அகந்தையும் உள்ளவர்களாகக் காணப்படுவது எளிதாக உள்ளது.

லௌகீகமும், லௌகீகத்தால் உருவாகிற மனநிலையும் கிறிஸ்தவத்தின் உன்னத குணத் திற்கு நேர் எதிராக இருக்கின்றன. இதைப் புரிந்துகொள்ள பிலி 2:3 எவ்வாறு உதவுகிறது?

## லௌகீகத்தால் முடிவில் பயன் இல்லை

தேவனை மெய்யாகவே நேசிக்கிற பலர் இருக்கிறார்கள். உலகப் பொருட்களால் அழிக்கமுடியாத உறவே அவர்கள் யாரென்பதைக் காட்டுகிறது.

***தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்பதைக் காட்டுவது எது? உபா 7:6; 1பேதுரு 2:9; கலா 2:20. நாம் உண்மையிலேயே யார் என்பதை நாம் எங்கு காணலாம்?***

---

---

'நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது' என்று தேவன் சொல்கிறார். யோவான் 15:5. இந்த உறவு நேரடியானது; பாதுகாப்பானது. "மெய்யான கீழ்ப்படிதல் எல்லாமே இருதயத்திலிருந்து புறப்படுகின்றன. அது கிறிஸ்துவோடு இணைந்து செயல்படுகிற இருதயமாகும். நாம் அனுமதித்தால், நம் சிந்தைகளிலும் நோக்கங்களிலும் அவர் வெளிப்படுவார்; நம் இருதயங்களையும் யோசனைகளையும் தம் சித்தத்தோடு இணையச் செய்வார்; அவருக்குக் கீழ்ப்படியும்போது, நம் சொந்த உணர்வுகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களாக இருப்போம்." - *EGW, DA, p 668.*

ஆனால், நம்மிடமுள்ள பொருட்கள்தாம் நம்முடைய ஆடையாளம் என்று லௌகீகம் காட்டுகிறது. அதாவது, நம்மிடமுள்ள பொருட்களையும், அவற்றால் நாம் வாங்கக்கூடியவற்றையும் வைத்தே நம்மை அடையாளங்காட்டுகிறோம். இதைத்தான் யாக்கோபு எச்சரிக்கிறார்: "உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும் கடைசிநாளிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்.' யாக் 5:3. 'சேர்ப்பது' என்றால், பலவகை உடைமைகளை அள்ளிக் குவிப்பதாகும்; அவை கொஞ்சமாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும் அவை தாம் தங்கள் அடையாளம் என்று அநேகர் நினைக்கிறார்கள்.

லௌகீகம் என்பது ஓர் அடையாளச் சிக்கல். அதனால்தான் நம்மில் அநேகர் நம்மிடமுள்ள பொருட்களை வைத்து நம்மை அடையாளங்காட்டுகிறோம். நம் பொருட்களே நமக்குக் கடவுளாகிறது. மத் 6:19-21. "என் பொருட்கள் இல்லாமல் நானில்லை" என்று ஒருவர் சொல்கிறார். நம் பொருட்களை நம் அடையாளமாக நாம் வைத்திருப்பது எவ்வளவு வருத்தகரமானது! கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொண்டும், பொருளாசையோடு வாழ்வது எவ்வளவுக்கு வீணானதும், வருத்தகரமானதும், பயனற்றதுமாக இருக்கிறது! நாம் நம் தேவனை வைத்து நம்மை அடையாளங் காண்கிறோமா? அல்லது, நம் பொருட்களை வைத்தா? ஏதாவது ஒன்றை வைத்து நாம் நம்மை அடையாளங் கண்டே ஆகவேண்டும்.

உங்களிடமுள்ள பொருட்களை வைத்து எவ்வளவு தூரத்திற்கு உங்களை நீங்கள் அடையாளங் காண்கிறீர்கள்?

---

## மேலும் படிக்க:

சத்துருவானவன் இன்று மலிவான விலைக்கு ஆத்துமாக்களை வாங்கிவருகிறான். ‘விலையின்றி விற்கப்பட்டீர்கள்’ என்று வேதாகமம் சொல்கிறது. உலகத்தின் கைதட்டலை வாங்குவதற்காக ஓர் ஆத்துமா விலைபோகிறது; இன்னொன்று பணத்திற்கு விலைபோகிறது; இழிவான இச்சைகளை நிறைவேற்ற ஒன்று விலைபோகிறது; கேளிக்கைக்கு ஒன்று விலை போகிறது. இந்தப் பேரங்கள் தினமும் நிகழ்கின்றன. கிறிஸ்துவின் இரத்தத்தால் ஈடற்ற விலைக்கு வாங்கப்பட்டவர்களை விலைமலிவாக வாங்க சாத்தான் பேரம்பேசுகிறான். – *EGW, 5T, p 133.*

லௌகீகத்திற்கு அடிமைப்படுத்தி ஆத்துமாக்களை விலைக்கு வாங்குவதே சாத்தானுடைய நோக்கம்; லௌகீகமானது நயவஞ்சகமாக ஒவ்வொரு இருதயத்திலும் ஆசையைத் தூண்டப்பார்க்கிறது. அதற்குப் பேசத்தெரியாவிட்டாலும், எல்லோரது பாஷையும் தெரியும். ஏழைக்கும் பணக்காரனுக்கும் சந்தோஷத்தைக் கொடுத்து, இச்சையை நிறைவேற்ற வைத்து, ‘எனக்குத் தேவையான அனைத்தும் இருக்கின்றன, வேறெதற்குக் கவலைப்படவேண்டும்’ என்று பேசவைக்கவும் அதற்குத் தெரியும். இப்படித்தான்லௌகீகம் மனதைக் கெடுக்கிறது; தேவனை நம்பாமல் தங்களிடம் இருப்பதை நம்பச்செய்கிறது. ‘பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்’ என்பதே அதற்குச் சரியான மருந்து. சக 4:6. நாம் நம்மை ஆவியானவருக்கு அர்ப்பணித்து, லௌகீகம் நம் வாழ்க்கையில் அரசாட்சிசெய்ய அவருடைய கிருபை உதவியுடன் அனுமதிக்காமல் இருந்தால், பரிசுத்த ஆவியானவருக்குமுன் லௌகீகத்தால் நிற்கமுடியாது.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *ஒருவர் ஏழையாக, உலகப்பொருட்கள் அதிகம் இல்லாதவராக இருக்கலாம்; ஆனாலும் இந்த வாரத்தில் நாம் பார்த்த சில ஆபத்துகளில் அவர் சிக்க வாய்ப்புள்ளது; எப்படி?*

2. *“பணத்தை நான் கண்டுகொள்வதே இல்லை; அது ஒரு பொருட்டே இல்லை” என்று சிலர் சொல்கிறார்கள். இப்படிச் சொல்கிறவர்கள் பெரும்பாலும் பணக்காரர்களாக இருப்பார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. பணம் முக்கியமானதுதான்; வாழ்க்கையில் அதற்கும் ஒரு பங்கிருக்கிறது. ஆனால், ‘பணத்தையும் நம் பணத்தேவையையும் வேதாகமம் சொல்கிறபிரகாரம் கையாளுகிறோமா?’ என்பதே நாம் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயமாகும்.*

3. *பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். மத்தேயு 6:19-21.* பொருளாசையிலிருந்து நம்மைப் பாதுகாப்பதற்கு, இங்கு இயேசு சொல்வது எவ்வாறு உதவியாக இருக்கும்?

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள்.

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*